செ.வெ.எண்:77 நாள்:03.02.2009

அரசு செய்தி வெளியீடு - 3.2.2009

இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் பெயரால் 4ஆம் தேதியன்று நடத்துவதாக அறிவிக்கப்பட்டுள்ள முழு அடைப்புக் குறித்து அந்த போராட்டத்தை தலைமையேற்று நடத்துகின்ற கட்சிகளுக்கு தலைமைச் செயலாளர் இன்று அனுப்பியுள்ள கடிதம் வருமாறு :-

"4–2–2009 புதன்கிழமையன்று இலங்கைத் தமிழர் பாதுகாப்புக்காக என்று தமிழ் நாட்டில் முழு அடைப்புப் போராட்டம் நடத்த தங்கள் கட்சியின் பெயரால் அழைப்பு விடுத்திருக்கிறீர்கள். எந்த நோக்கத்திற்காக முழு அடைப்பு அறிவிக்கப்பட்டாலும் – அதனை நடத்தக் கூடாது என்று ஏற்கனவே உச்சநீதி மன்றம் தீர்ப்பு வழங்கி; அது தொடர்பாக இப்போதும் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் மீதே உச்ச நீதி மன்றத்தில் ஒரு வழக்கு நடைபெற்றுக் கொண்டிருப்பதை அறிவீர்கள். இந்த விவரங்களைச் சுட்டிக்காட்டி தமிழக அரசு அறிக்கை மூலம் தெரிவித்திருக்கிறது. இப்போது நீங்கள் நடத்துவதாக அழைப்பு விடுத்திருக்கும் முழு அடைப்பு என்பதன் நோக்கம் நல்ல நோக்கத்தை முன்னிட்டு என்று இருந்தாலும் – உச்ச நீதி மன்றம் முழு அடைப்பு நடத்துவதையே சட்ட மீறல் என்ற பொருளில் தடுத்து நிறுத்தியிருப்பதாலும் – அந்த வழக்கு உச்ச நீதி மன்றத்தில் முடியாதிருக்கும் நிலையில் நீங்கள் அறிவித்துள்ள 4ந்தேதி முழு அடைப்பு சட்டவிரோதமானது என்று எச்சரிக்கப்படுகிறது.''

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9